ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1979/33 - 2016 අගෝස්තු මස 11 වැනි බ්‍රහස්පතින්දා - 2016.08.11

*1979/33 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 11 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2 வது திருத்தம்**

இலங்கை நிர்வாக சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு

*2013 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 23 ஆந் திகதி திங்கட்கிழமை, 1842/2 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட மற்றும் 2015, யூலை மாதம் 16 ஆந் திகதிய, 1923/47 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானியில் திருத்தியமைக்கப்பட்ட இலங்கை நிர்வாக சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு கீழ் குறிப்பிடப்படும் வகையில் திருத்தியமைக்கப்படல் வேண்டும்.*

*அரச சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,*

எச். எம். காமினி செனவிரத்ன,<br>
செயலாளர்,<br>
*அரச சேவை ஆணைக்குழு.*

**இரண்டாம் (II) அட்டவணை**

இடைக்கால ஏற்பாடுகள்

*1.* **பொதுவான நிபந்தனைகள் :**

*1.* *1.* **இடைக்காலப் பகுதி**

இடைக்காலப் பகுதி 2017 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரை நடைமுறையில் இருக்கும்.

*2.* **பதவியுயர்த்தப்படும் முறைமை :**

*2. 1* **சேவையின் இரண்டாம் (II) ஆம் தரத்திற்கு பதவியுயர்த்துதல் :**

*2. 1.1 :* 2008, சனவரி மாதம் 01 ஆந் திகதிக்கு முன்னர் சேவையின் மூன்றாம் (iii) வகுப்பிற்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட அலுவலர்கள் இரண்டாம் (ii) வகுப்பிற்கு பதவியுயர்த்துதல் 2.1.1 (அ) உப பந்தியில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் கீழ் அமுல்படுத்தப்படும்.

*2. 1.2 :* 2008, சனவரி மாதம் 01 ஆந் திகதி முதல் இச்சேவைப் பிரமாணக் குறிப்பு வலுவில் இருக்கும் திகதி வரை சேவையின் மூன்றாம் (iii) வகுப்பிற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட அலுவலர்கள் சேவையின் இரண்டாம் (ii) தரத்திற்கு பதவியுர்த்துதல், 2.1.2 (அ) உப பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் இடம் பெறும்.

*8- 744*